காங்கேயம் பகுதிக்கு மாட்டுப் பண்ணை

*779 வினா திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம், காங்கேயம் பகுதியில் மாட்டுப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசாங்கத்தின் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, காங்கேயம் காளைகள் உலகப் பிரசித்திப் பெற்றவையாகும். தனியார் துறையில் அங்கிருந்து காங்கேய இன மாடுகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அரசாங்கமே ஒரு பண்ணை அமைத்து, தரமான காளைகளை உருவாக்கவும், காங்கேயம் போன்ற மாடுகளை தமிழ்நாடு பூராவுக்கும் விற்பனைக்குக் கொண்டுவரவும் வேண்டிய வழிவகைகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காங்கேயம் கால்நடையின் தரத்தைப்பற்றி நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். காங்கேய இன மாடுகள் உழைப்புக்கேற்றவை என்பதும், தரமான காளைகள் தமிழ்நாட்டில் பரவலாகத் தேவைப்படுகிறது என்பதும் அரசாங்கத்தால் அறியப்பட்ட உண்மையாகும். காங்கேயம் பகுதியில் இரண்டு பேர் தனிப் பட்ட பண்ணைகளில் காங்கேய இனக் காளைகளை விருத்தி செய்கிறார்கள். அதேபோல் பொலி காளைகளை உற்பத்தி செய்தும், பொலி காளைகள் இல்லா விட்டாலும், மற்ற எருதுகளை உற்பத்தி செய்தும் விற்பனை செய்கிறார்கள். அந்த வட்டாரத்திலுள்ள விவசாயிகளும் இம்மாதிரியான காளைகளை வளர்ப் பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த இனக் காளைகள் தமிழ்நாடு முழுவதற் கும் விற்கப்படுகிறது.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, காங்கேயம் பகுதியில் கால்ஷியம் சத்து நிறைந்த கொழுக்கட்டை புல் வளர்கிறது. அதனால் அந்தப் பகுதியில் நல்ல முறையில் காளை இனம் வளர்ந்து நல்லவிதமாக விற்பனையாகிவருகிறது. இப்போது மேய்ச்சல் நிலங்கள் குறைக்கப்பட்டுள் ளன. ஒரு சிறிய இடங்கள்தான் மேய்ச்சல் பகுதியாக இருப்பதால் அந்த இன காளைகள் விரைவில் குறைந்துவிடும். ஒரு விவசாயிக்குக் குறைந்தது 4 அல்லது 5 ஏக்கரா அளவுக்காவது மேய்ச்சல் நிலம் என்ற வகையில் எக்ஸம்ப்ஷன் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ? மேலும், ஏற்கெனவே இருந்த "கீ வில்லேஜ் சென்ட்டர்களை" மூடிவிட்டார்கள். மறுபடியும் அதைத் திறந்து நல்ல முறையில் உதவ அரசு முன்வருமா ?